**செய்தி வெளியீடு எண்: 66/2022** **நாள்: 30.07.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் கூடுதலாக 2 நகரும் படிக்கட்டுகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி பயணிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்**

சென்னை மெட்ரோ இரயிலில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகளின் நலனுக்காக பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 1,85,000 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்கிறார்கள்.

சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைமேடை 1 மற்றும் நடைமேடை 2-ல் இருந்து பொதுத்தளத்திற்கு இறங்குவதற்கு 2 நகரும் படிக்கட்டுகள் கூடுதலாக நிறுவப்பட்டு மெட்ரோ பயணிகளின் பயன்பாட்டிற்காக இன்று (30.07.2022) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) திறந்து வைத்துள்ளார்.

**அப்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்ததாவது:**

கோயம்பேடு, சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் 41 நகரும் படிக்கட்டுகள் கூடுதலாக நிறுவப்பட உள்ளதாகவும், அதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போது 41 மெட்ரோ இரயில் நிலையங்களில் சில நிலையங்களில் ஏறுவதற்கும், சில நிலையங்களில் இறங்குவதற்கு மட்டுமே நகரும் படிக்கட்டுகள் இருக்கும் நிலையில் சில நிலையங்களின் நுழைவு வாயிலில் கூடுதலாக நகரும் படிக்கட்டுகள் தேவைப்படுகிறது. மெட்ரோ பயணிகளின் நலன் கருதியும், அவர்களுது கோரிக்கைகளை ஏற்றும் தற்போது 41 மெட்ரோ நிலையங்களில் நகரும் படிக்கட்டுகள் கூடுதலாக அமைக்கப்பட உள்ளது.

அதன்படி அண்ணா நகர், சின்னமலை, வண்ணாரப்பேட்டை, அரசினர் தோட்டம், ஈக்காட்டுத்தாங்கல், தேனாம்பேட்டை, உயர்நீதி மன்றம், ஆயிரம் விளக்கு, மண்ணடி, பரங்கி மலை, தண்டையார்பேட்டை ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா ஒரு நகரும் படிக்கட்டுகள் வீதம் 11 நகரும் படிக்கட்டுகளும், நேரு பூங்கா, எழும்பூர், நங்கநல்லூர்ச் சாலை, கிண்டி, ஏ.ஜி-டி.எம்.எஸ், தியாகராயா கல்லூரி, நந்தனம் ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா 2 வீதம் 14 நகரும் படிக்கட்டுகளும், அண்ணா நகர் கோபுரம் மெட்ரோ இரயில் நிலையத்தில் 3 நகரும் படிக்கட்டுகளும், வடபழனி மற்றும்

மீனம்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையத்தில் தலா 4 வீதம் 8 நகரும் படிக்கட்டுகளும், திருமங்கலத்தில் 5 நகரும் படிக்கட்டுகளும் ஆக மொத்தம் 41 நகரும் படிக்கட்டுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு விரைவில் பணி தொடங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர்கள் எஸ்.கே.மாதவன் (மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகள்), எஸ். சதீஷ்பிரபு (தொடர் வண்டி மற்றும் இயக்கம்), மேலாளர்கள் பி. லட்சுமி (வருவாய்), டி.சௌந்தர் (மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகள்), மற்றும் கே.எஸ்.அருண் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள்ராதா (இயக்கம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**